**O.S.74/2024**

Date: **05.11.2025**

Pw–1 – பரமசிவன், த/பெ.சுப்பையா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

1. வழக்கு தபசில் சொத்து, அதற்கு தெற்கே உள்ள காலியிடம், கிழக்கு பக்கம் உள்ள கடை அனைத்தும் ஆரம்பத்தில் என் தகப்பனார் சுப்பையாபிள்ளைக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் இடம்தான் பாத்தியப்பட்டிருந்தது. வழக்கு தபசில் சொத்திற்கு மேற்கு பக்கமாக ஒரு நடைபாதை உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்கு பக்கமாக சுப்பையாபிள்ளைக்கு பாத்தியப்பட்ட கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அதில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இயங்கி வந்தது என்றால் சரிதான். சுப்பையா பிள்ளை அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 31.01.1984–ம் தேதியில் உயில் எழுதிவைத்திருந்தார் என்றால் சரிதான். சுப்பையா பிள்ளைக்கு 3 ஆண் மக்களும், 6 பெண் மக்களும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. சுப்பையா பிள்ளை மனைவி பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். சுப்பையா பிள்ளை இறந்த பிறகு வள்ளியம்மாள் மேற்சொன்ன உயில் படி ஆயுள்பாத்தியதாரர் என்ற முறையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வாடகை வாங்க நடவடிக்கை எடுத்து வாடகை வாங்கி வந்தார் என்றால் சரிதான். சுப்பையா பிள்ளை இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்து உயில் படி வள்ளியம்மாள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வாடகை வாங்கி வந்து இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். வள்ளியம்மாள் இறந்த பிறகு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இயங்கி வந்த கட்டிடத்தை வாரிசுகள் வசம் ஒப்படைக்ககேட்டு அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் ஓஎஸ் எண்.77/2016 வழக்கு தாக்கல் செய்துள்ளார்

என்றால் சரிதான். நானும் அந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **சாட்சி ஒப்புக்கொண்டதின்பேரில் மேற்படி ஓஎஸ்எண்.77/2016 வழக்கின் எதிர்வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. இந்த வழக்கின் விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். கதவு எண்.143 ஜி கட்டிடமும், அடிமனையும் எனக்கு பாத்தியம் என்றும், அதனை விளம்புகை செய்ய கேட்டும், சுவாதீன பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், வாடகை பாக்கியும் கேட்டுள்ளேன். இந்த வழக்கில் பாகப்பிரிவினை 2004 ம் ஆண்டு வாய்மொழியாக நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதை தவிர வேறு பாகப்பிரிவினை நடக்கவில்லை என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.77/2016 ன் எதிர்வழக்குரையில் 5 ம் பத்தியில் 02.02.2005 ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் குறுக்கு விசாரணை செய்யும்போது 02.02.2005 ம் தேதியை தவிர வேறு எந்த தேதியிலும் வாய்மொழி பாகப்பிரிவினை நடக்கவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. பாகப்பிரிவினையின் அடிப்படையில்தான் தபசில் சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் இல்லை, என் தகப்பனார் எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் எனக்கு சர்வசுதந்திர உரிமை இருக்கிறது, அதன் அடிப்படையில்தான் நான் உரிமை கோருகிறேன். என் தகப்பனார் எழுதிவைத்த உயிலை பார்த்தேன், அது நடைமுறைக்கு வந்துள்ளது என்றால் சரிதான். அதில் கண்ட சரத்துக்கள் சரியானதுதான் என்றால் சரிதான். என் தகப்பனாரின்

எண்ணம் அந்த உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், உயிலில் சொத்து விபரங்கள் தனியாக காட்டப்படவில்லை. உயிலில் எனக்கு என்ன பாத்தியதை கொடுக்கப்பட்டுள்ளதோ அதை தவிர கூடுதலாக எனக்கு உரிமம் உண்டா? என்றால் உண்டு. எதன் அடிப்படையில் அந்த உரிமை உண்டு என்றால் வாரிசு என்ற அடிப்படையில் உரிமை உண்டு.

5. பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரர் செல்வராஜ்ஜின் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி செல்வராஜின் மகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி செல்வராஜின் மனைவி என்றால் சரிதான். செல்வராஜிற்கும், 2ம் பிரதிவாதிக்கும் இதைதவிர ஒரு பெண் குழந்தை உண்டு என்றால் சரிதான். செல்வராஜின் பெண் மகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவரை சேர்க்க அவசியம் இல்லை. வழக்கு தபசில் சொத்தில் பிரதிவாதிகளுக்கு வாடகை கொடுக்கப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணம் உள்ளது என்றால் வாடகை ஒப்பந்தம் ஆவணம் உள்ளது. மேற்படி ஒப்பந்தம் எந்த தேதி, எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 2005ல் இருந்து 2010 வரை ஏற்பட்டது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது போல் யாதொரு வாடகை ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

6. முந்தைய ஆர்எல்டிஓபி வழக்கில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் நிலச்சுவான்தார்– வாடகைதாரர் ஒப்பந்தம் இருப்பதாக கூறி காலி செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆர்எல்டிஓபி வழக்கில் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே நிலச்சுவான்தார்–வாடகைதாரர் உறவு இல்லை, உரிமையை நிலைநாட்டி வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என உத்தரவு பிறந்துள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு

எண்.207/2016 என்ற வழக்கை செல்வராஜ் மீது வள்ளியம்மாள் சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், வள்ளியம்மாளின் சொத்திற்கும், இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. அந்த வழக்கு மத்தியில் சமரசம் ஏற்பட்டது. அந்த சமரச விபரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, நீதிமன்றம் மூலமாகத்தான் சமாதானம் ஆகியது.

7. மேற்படி வழக்கின் சமாதான விபரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படவில்லை, ஆனால் சொத்தை கிரயம் வாங்கிவிட்டேன். அதற்கு தொகை ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.207/2016 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் வள்ளியம்மாள் உயில் எழுதிவைத்ததாக சொல்லி பதிவு பெறாத மோசடி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது அந்த சொத்தை தனக்கு கொடுத்துவிட்டால் இதர சொத்துக்களில் பிரச்சனை செய்யமாட்டேன் என்று ஒப்புக்கொண்டு நோட்டரிபப்ளிக் முன்பு யாதாஸ்து எழுதிகொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தொகை ஏதும் பெறாமல் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் அந்த சொத்தை எனக்கு பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. பத்திரம் எழுதி வாங்கியபிறகு சமாதானத்தை பதிவு செய்ய வராமல் மோசடி செய்து விட்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த வழக்கு முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. தபசில் சொத்து சம்பந்தமாக என் பெயருக்கு பட்டா கிடையாது என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். சுப்பையாபிள்ளை எழுதி வைத்த உயிலில் அவரின் ஆண் மக்களுக்கு ஆயுள்

**பாத்தியம்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுப்பையா பிள்ளையின் பெண் மக்களுக்கு உயிலின் அடிப்படையில்தான் சொத்தில் உரிமை இல்லை என சொல்கிறேனா என்றால் ஆமாம்.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/-பரமசிவன்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

P PRAVEEN JEEVA

Uploaded on 05.11.2025
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.11.05 14:40:22 +0530

மு.மா.உ.நீ
அம்பாசமுத்திரம்.